**பள்ளேபொல பிரதேச சபை**
**மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மாரச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பள்ளேபொல பிரதேச சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சொத்துக்கள் மதிப்பாய்வு அறிக்கையில் உள்ளடங்கியிருக்கும் 12 ஏக்கர் 2 ரூட் 33.58 பேர்ச் அளவான 21 காணிகள் மற்றும் பரப்பளவு குறிப்பிடப்படாத 3 இடங்களினதும் பெறுமானம் மதிப்பீடு செய்து நிதி அறிக்கைகளில் குறிப்படப்பட்டிருக்கவில்லை. | காணிகளை மதிப்பபபீடு செய்து கணக்காக்கப்பட வேண்டும். | அரசின் மதிப்பீட்டிற்காக சொத்துக்களை சமர்ப்பித்து மதிப்பீடொன்றைப் பெற்றுகொள்ள விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகை ரூபா. 29,569,870 ஆன 13 கணக்குப் பிரிவுகளுக்கு சம்மந்தப்பட்ட மீதிகளுக்கும் அம் மீதிகளுடன் சம்மந்தப்பட்ட | கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுப்க்கப்படும் | செலவினப் பேரேடுகளின் மீதிகள் நாட்குறிப்புடன் இணைக்கப்பட்ட பின் பெறப்படும் நிதிக்கூற்றில் உள்ள மீதிகளில் ஏற்பட்டிருக்கும் |

| | | |
|---|---|---|
| தேவையான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் காட்டப்பட்டிருக்கும் மீதிகளுக்குமிடையில் ரூபா. 960,744 வித்தியாசம் காணப்படுகின்றன. | | வித்தியாசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த வரவு செலவுக் கணக்கின் பெறுபேறுகளுக்கு பாதிப்பு இல்லையென தெரிவித்துக் கொள்கின்றேன். |

### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பெறப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 4,152,554 ஆகும். | பேற வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். | கடை வாடகைகள் மற்றும் முற் பணங்கள் இது வரையில் அறவிடப்பட்டுள்ளன. கடனாளிகளிடமிருந்து இது வரையில் ரூபா. 1,081,327.76 தொகையை அறவிட்டுள்ளதோடு 75% ஏக்கர் வரி மற்றும் நீர்கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளது. வீதவரியும் வரியும் ரூபா. 115,125 ஆன தொகையை அறவிட நடவடிக்கை எடுப்க்கப்படும் |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 2,850,624 ஆகும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேமிப்புக் கணக்கில் நிலவும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 342,067 தொடர்பாக சம்பந்தப்பட்டோர் அறிவுருத்தப்படவும் பின் எஞ்சும் தொகையானது சபை நன்கொடைகளில் சேர்க்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 2008 ஜனவரி 25 ஆந் திகதிய இலக்கம் 1533/16 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரதி ஆவணம் A 'அ' பகுதியின் 31 ஆம் பிரிவு. | ஆட்சிப் பிரதேசத்திறகுள் நடத்தப்பட்டு வந்திருக்கும் மாடுகொல்லுமிடத்திற்காக சூழல் அனுமதிப்பத்திரமொன்றை பெற்றிருக்கவில்லை. | இது சம்மந்தமாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையில் பங்கேற்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்றை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30 /2016 இலக்கத்திற் குரிய அரச நிர்வாக சுற்றறிக்கை | நீண்ட வருடகாலமாக சபையின் 6 வாகனங்களின் எரிபொருள் தகன பரிசோதனை செய்யப்படடிருக்கவில்லை. | சுற்றரிக்கை அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கெப் வாகனத்தில் 2018 மே 24 அன்று எரிபொருள் தகன பரிசோதனை செய்யப்பட்டுள்ளதோடு ஏனைய வாகனங்களில் மற்றும் கெப் வாகனத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் தகன பரிசோதனை செய்யப்பட தயார் செய்யப்பட்டு வருகிறது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,422,916 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,277,901ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் குத்துகையும் | 4,892,000 | 5,767,345 | 5,586,732 | 1,952,798 | 4,900,000 | 5,748,132 | 5,535,964 | 1,711,579 |
| (ii) வாடகை | 462,000 | 569,327 | 481,471 | 137,862 | 442,400 | 456,359 | 466,360 | - |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்ட ணங்களும் | 800,000 | 671,870 | 671,80 | - | 700,000 | 607,520 | 626,945 | - |
| (iv) ஏனைய வருமானம் | 11,210,500 | 8,103,556 | 10,964,632 | 7,198,957 | 20,184,000 | 12,906,771 | 10,464,833 | 7,019,924 |
| | 17,364,500 | 15,112,098 | 17,032,835 | 9,289,617 | 26,226,400 | 19,718,782 | 17,094,102 | 8,731,503 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையான மொத்த வருமானம் ரூபா. 8,731,503 மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா. 9,289,618 ஆக ரூபா. 558,115 இனால் அதிகரித்திருந்தது. | நிலுவையான வருமானங்கள் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலையான வருமானப் பரிசோதகர் இல்லாமையினால் நிலுவை வருமானம் மற்றும் வருமானம் சேகரிக்கப்படுவது குறைந்துள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி நாளன்று நிலுவையாகியிருந்த வரிப்பணத் தொகை ரூபா. 237,834 ஆக இருந்ததுடன் 1987 இலக்கம் 15 இற்கு | சட்ட விதிகள் கருத்திற்கொள் ளப்பட்டு வரி அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட | 1987 இலக்கம் 15 இற்கு உரிய பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் சொத்துக்களை தடை செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| உரிய பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வரிப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | வருகின்றது. இறுதி அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2012 ஆம் ஆண்டிற்குப் பின் ஆட்சி பிரதேசத்தினுல் வளர்சியடைந்த பிரதேசங்களை இனங்கானுதல் மற்றும் அதற்கமைய புதிய வரிப்பண எல்லைகளை விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | தேவையான் நடவடிக்கைகள் விரைவாக் கையாளப்பட வேண்டும். | முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் இணங்காணப்பதற்கு தேவையான விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 1987 இலக்கம் 15 இற்கு உரிய பிரதேச சபை சட்டத்தின் 135 ஆம் பிரிவின் கீழ் வரிப்பணத்திலிருந்து விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் பட்டியலொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஒழுங்குபடுத்தப் பட வேண்டும். | வரிப்பணம் மற்றும் குத்துகையினால் விடுவிக்கப்பட்ட சொத்துக்கள் சம்மந்தமாக ஆவனத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் விடுவிக்கப்பட்ட சொத்துக்களின் பட்டியலொன்றை தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 நீர்க் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான நீர் கட்டணங்களின் மீதி ரூபா. 1,672,003 ஆக இருந்தது. | நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடமாடும் சேவையொன்றின் மூலம் நீர்க் கட்டணங்கள் அறவிடப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 அன்று கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா. 680,380 மற்றும் முத்திரைப்பணம் | நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | பெற்றிருக்க வேண்டிய ரூபா. 680,380 நீதிமன்றத் தண்டப்பணத்தில் 2019 ஆம் ஆண்டிற்குள் ரூபா. 395,332 |

| | |
|---|---|
| ரூபா. 6,518,307ஆக இருந்தது | தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. முத்திரைக்கட்டணம் மத்திய மாகாண சபையிடம் அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நிறைவு மட்டங்களை அடையாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அங்கிகரிக்கப்பட்ட நிதிஏற்பாடான ரூபா 700,000 தொகையில் 3 நிர்மாணங்களை செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டங்களுக்கமைய வருடமொன்றிற்குள் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட முடியாமல் சென்ற 3 வேலைகள் 2019 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 3 கட்டிடங்களின் கட்டுமான பணிகள் இன்னும் நிறைவு செய்யப்படாததால் அவ வேலைத்திட்டங்களினுடு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனது. | கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு கட்டிடங்கள் பயனுள்ளவாறு உபயோகிக்கப்பட வேண்டும். | தம்பஹிட்டியாவ மயான பூமி மற்றும் தகவல் தொழிநுட்ப மையத்திற்காக கட்டப்பட்ட கட்டிடத்தை 2 கடைகளாக மாற்றும் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்படடுள்ளது. பல்லேபொல கலாச்சார ஒன்றுகூடல் மண்டபத்தின் மேல் மாடியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்து. |

**(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ,2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா. 1,489,948 செலவிட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த கெம்போஸ்ட் முற்றத்தை கட்டுவது மற்றும் ஏனைய வசதிகளை பூர்த்தி செய்யாதிருந்த காரணத்தினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளை பயனள்ளவாறு பயன்படுத்தமுடியாதிருந்தது. | குறைபாடுகள் தீர்க்கப்பட்டு கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் அவசரமாக செய்யப்பட வேண்டும். | மானியம் கிடைக்கப்பெற்றால் வேலைத்திட்டம் மிக வெற்றிகரமாக செயற்படுத்தமுடியுமென்று தெரிவிதத்துக்கொள்ளப்படுகிறது. |

**(இ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு உரித்தான பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் 200 கிலோகிராம் அளவிலான கழிவு ஒழுங்கானதொரு முகாமைத்துவமின்றி குவிக்கப்பட்டதன் காரணமாக கூடியளவில் சுற்றாடல் சிக்கல்கள் தோன்றியிருந்தன. | கழிவு முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சபையினால் சேர்க்கப்படும் கழிவுகள் தம்புள்ள மாநகர சபையினால் செயற்படுத்தப்பட்டுவரும் முகாமைத்துவ வேலைத்திற்கு கையளிக்க ஆலோசனை செய்யப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்குத் தேவையான இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சேவையை விட்டுச் சென்ற, இறந்து அல்லது இடம் மாரிச் சென்ற அதிகாரிகள் 11 பேருக்குச் சொந்தமான ரூபா. 27,501 பிணை வைப்புத் தொகை விடுவிக்கப்படாது வைத்திருக்கப்பட்டிருந்தது. | சம்மந்தப்பட்ட பிணைத் தொகை விடுவிக்கப்பட வேண்டும். | காட்டப்பட்டிருக்கும் அதிகாரிகள் 11 பேரின் சேவை பிணை வைப்புக்கள் எதிர்காலத்தில் செலுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட 22பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடமாக்கப்பட்ட பதவிகள் நிரப்பப்பட வேண்டும். | சபை செயளாலரினால் வெற்றிடமாக்கப்பட்ட 12 பதவிகளிற்காக சேவையாளர்கள் இனைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படாதிருத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையினால் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டுவரும் 4 காணிகளுக்கு மற்றும் 46 மயான பூமிகளுக்கு உரிமைச் சான்றுகள் மற்றும் கணக்கெடுப்புத் திட்டங்கள் இல்லாதிருந்த நிலையில் பிரதேச சபைக்குச் சொந்தமான 13 மயான பூமிகள் பாதுகாக்கப் படாதிருந்தது. | காணிகளின் உரிமை நிலைப்படுத்தப்பட வேண்டும். | பிரதேச சபை தற்போது பாவணை செய்யும் உரிமைச் சான்றுகள் இல்லாத அனைத்து காணிகளையும் (அரசின் காணிகள்) மயான பூமிகளாக பயன்படுத்திக்கெள்வதோடு பகுதிகளை ஒழுங்கமைத்துத் தருமாறு பிரதேச செயளாலரிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்படுத்தப்பட்டு வரும் வேறு நிறவனங்களினால் உரிமை கோரப்படும் 4 வாகனங்களை கைப்பற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை கைப்பற்றப்பட வேண்டும். | 2 வாகனங்கள் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் காரணமாக கையேற்க முடியவில்லை. மோட்டார் சைக்கிள்கள் பிரதேச சபையின் கீழ் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | காணிகள் மற்றும் கட்டிட ஆவணத்திற்கமைய 2 ஏக்கர் 31 பர்ச் ஆன 3 மயான பூமிகளும் பரப்பளவு குறிப்பிடப்படாத மேலும் 16 காணிகளினதும் உரிமைகள் கைப்பற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடங்களின் உரிமையை பெற்றுக்கொள்ள தேவையான சட்ட ரீதியான ஆவணங்கள் தயார் செய்யப்பட வேண்டும். | இந்த காணிகளுக்கான சட்டரீதியான ஆவணங்கள் சபையிடம் காணப்படாத நிலையில் 2019 ஆம் ஆண்டு இவ்விடங்கள் அளக்கப்பட்டு சபையின் பேரில் சட்ட ரீதியான ஆவணங்கள் தயார் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிதிதுக் கொள்ளப்படுகிறது. |
| (இ) | கழிவுகள் அகற்றப்பட பயன்படுத்தப்பட்ட காணிகள் புனரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 60 பர்ச் காணி கைப்பற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியைக் கைப்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காணி சீர்த்திருத்தும் ஆணைக்குழு மூலமாக இந்த இடம் குத்துகைக்கு அல்லது வாடகைக்கு சபையிடம் வழங்குவதற்கான செயற்பாடுகள் நடத்தப்படவுள்ளது. மேலும் இச் செயற்பாட்டை விரைவாக நிறைவேற்றித் தருமாறு பல சந்தர்ப்பங்களில் சபையினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |

### 3.4.3 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (அ) | பகுதிகளாக பிரிக்கப்பட்ட காணிகளான பொதுக் காணிகளாக பிரதேச சபையிடம் கையளிக்கப்படக்கூடிய காணித் துண்டுகள் 9 இனை பொதுத் தேவைகள் அல்லது பிரதேச சபையின் பொதுச் சேவை செயற்பாடுகளுக்காக பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படாது காடுகளாகியிருந்தன. | சபைக்கு உரித்தான காணிகள் பலனளிக்கும் வகையில் பயன்படுத்தப் பட வேண்டும். | தற்போது சம்மந்தப்பட்ட இடம் துப்புரவு செய்யப்பட்டு பயனுள்ளவாறு குத்துகைக்கு விடப்பட்டு வருமானம் ஈட்டவும், பொது வேலைகளுக்காக பயன்படுத்தப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| (ஆ) | ரூபா. 1,305,900 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் 4 வாகன வகைகள் , பெறுமதி இனங்காணப்படாத 8 இயந்திர உபகரணங்கள் செயலற்று காணப்பட்டது. | புதுப்பிக்க முடியுமான உபகரணங்கள் மற்றும் வாகனங்களை புதுப்பித்தல் , புதுப்பிக்க முடியாத உபகரணங்கள் மற்றும் வாகனங்களை அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். | சம்மந்தப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக தொழிநுட்ப அறிக்கையொன்றை பெற்று எதிர்காலத்தில் புதுப்பிக்கவோ அல்லது பாவணைக்கு எடுக்கப்பட முடியாவிடின் ஏலத்திலிடப்படவோ நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 1996 இல் ஆரம்பிக்கப்பட்ட 2013 இலிருந்து செயற்படாது காணப்பட்ட மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கொன்றில் ரூபா.36,729 ஆன மீதியொன்று காணப்பட்டது. | சேமிப்புக் கணக்கு பயனுள்ளவாறு உபயோகிக்கப்பட வேண்டும். | மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கான இலக்கம் 24120015007124 இலுள்ள ரூபா. 36,729 ஆன தொகையை சபையின் வருமானத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.4 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் வாகன சாரதிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுவதால் 2 வாகனங்கள், JCB இயந்திரமொன்று மற்றும் 2 கொன்கிரீட் மிக்சர் இயந்திரங்கள் செயலற்று | சரியான முறையில் வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வாகன சாரதிகளுக்கான பதவிக்கு ஆட்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன் புதிதாக பெறப்பட்ட |

| | | |
|---|---|---|
| யன்படுத்தப்படாத நிலையில் காண்பட்டது. | | வாகனங்களுக்காக வாகன சாரதிகளை வேலைக்கு சேர்க்க பதவிகள் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 இற்கு அமைய பெறுகை நேர ஆயிடையொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தும் செய்யப்படும் மாதரிச் சோதனையின்போது அதற்கு வெளியால் ருபா. 3,278,640 கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். . | விவரமான பெறுகைத்திட்டமொன்று ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5.2 ஓப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **தம்பஹிட்டியாவ மயான பூமியில் எஞ்சியுள்ள வேலைகளை நிறைவு செய்தல்** | | |
| (அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.9.1 இற்கு அமைய சங்கமொன்டிற்கு ஒரு தடைவ வழங்க முடியுமான ஒப்பந்தங்களின் பெறுமதி 2 மில்லியன் ரூபாவை தான்டக்கூடாதென்றாலும் , 2 மதிப்பீடுகளை தயார் செய்து மக்கள் சபையொன்றிற்கு ரூபா. 3,526,668 தொகையான அவ்விரண்டு பகுதிகளுக்கும் ஒரே நாளில் ஒப்பந்தங்களுக்கு ஒரே நாளில் கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மயான பூமியில் எஞ்சியுள்ள வேலைகளை முடிப்பதற்கான II ஆம் வேலைத்திட்டம் பொல்வத்த சுயசக்தி சனசமூக சபை மூலம் செய்யப்படாத நிலையில் அவ் வேலைத்திட்டம் நிறைவு செய்யப்பட முடியாது என அந்த சனசமூக சபையினால் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு 38 நாட்கள் முடிவடைந்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத நிலையில் ஒப்பந்தத்திற்கமைய பெப்ரவரி 08 ஆந் திகதி வேலைகள் முடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மயான பூமியில் எஞ்சியுள்ள வேலைகளை முடிப்பதற்கான II ஆம் வேலைத்திட்டத்தின் வேலைகள் நிறைவேற்றப்படும் நிலையில் எரிக்கும் அறை மற்றும் புகை நீக்கியை நிர்மானிக்கும் வேலைகள் நிறைவேற்றப்படுவதன் காரணமாக வேலைத்திட்டத்தின் எஞசியுள்ள வேலைகளை ஆரம்பிக்க தாமதமாகியுள்ளது. சனசமூக சபையின் கோரிக்கைக்கு அமைவரக ஒப்பந்த காலவரையரை ஒரு மாதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. |